


30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 30 | பாலம்: 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2020

## வேலை இழந்தோருக்குத் தொடரும் வாராந்தக் கொடுப்பனவு!

கோவிட்-19 தொற்று நோய்ப்பரம்பலாலும், அதைக்கட்டுப்படுத்த கனடிய மத்திய அரசு எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகளாலும் வருமானம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்க 2020 மார்ச் இல் மத்திய அரசு அமல்படுத்திய உதவித்தொகை வழங்கும் திட்டமான CERB என அழைக்கப்படும் கனடிய அவசரநிலை உதவித் திட்டம் (Canada Emergency Response Benefit) 2020 செப்ரெம்பர் 26ஆம் திகதியுடன் நிறைவு பெறுகிறது. இந்த CERB உதவித் திட்டம் மூலம் தகுதிவாய்ந்தோர் மாதாந்தம் $2,000 அரச உதவித் தொகையைப் பெற்றனர்.

2020 ஒகஸ்ற் 18இல் 43ஆவது கனடிய நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடரை இரண்டாவது அமர்விற்காகப் பிரதமர் பின்போட்டார். நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வுகள் மாட்சிமைதங்கிய இராணியின் பிரதிநிதியான ஆளுநர் Julie Payetteஇன் சிம்மாசனப் பிரசங்கத்துடன் செப்ரெம்பர் 23இல் ஆரம்பமானது. லிபரல் கட்சியின் கொள்கைகளை ஆளுநர் Julie Payette ஒரு மணித்தியாலமாக விளக்கி உரையாற்றினார்.

அரசு சமூகவளத்துறை மற்றும் உள்கட்டமைப்புக்களில் முதலீடு செய்வதன் மூலமும், தொழிலாளர்களுக்குப் பயிற்சிகள் அளிப்பதன் மூலமும், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை ஊக்குவிக்கத் தொழிலதிபர்களுக்கு ஊக்கத்தொகை அளிப்பதன் மூலமும் விரைவில் ஒரு மில்லியன் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும்.

2020 ஏப்பிரலில் மத்திய அரசு அமல்படுத்திய திட்டமான CEWS என அழைக்கப்படும் அவசரநிலை ஊதிய மானியத் திட்டமும் (Canada Emergency Wage Subsidy) CERBஉம் மாற்றியமைக்கப்படும். செப்ரெம்பர் 13ஆம் திகதிவரை கனடிய அவசரநிலை உதவித்திட்டம் $35 பில்லியனை கனடியர்களுக்கு வழங்கியுள்ளது.



கோவிட்-19 தொற்று நோய்ப்பரம்பலால் பெண் தொழிலாளர்கள் மேலதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீண்டும் தொழில் செய்யக் கூடிய வழிமுறைகளை அரசு செய்யும். கனடா முழுவதும் நிரந்தரமானதும் நீடித்து நிற்கக் கூடியதுமான குழந்தை பராமரிப்பு மற்றும் ஆரம்பகாலக் கற்றல் முறையில் ஒரு திட்டம் வகுக்கப்படும். அத்துடன் சிறுவர்களுக்குப் பாடசாலை தொடங்க முன்னரும் பாடசாலை முடிந்த பின்னரும் பராமரிப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன்மூலம் பெண் தொழிலாளர் விரைவில் வேலைக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட்-19 தொற்று நோய்ப்பரம்பலின் போது நடைபெற்ற துன்பியல் சம்பவங்களைத் தவிர்க்கும் முகமாக நீண்டகால முதியோர் பராமரிப்பு இல்லங்களை நடத்துவது தொடர்பாக நாடு தழுவிய விதிமுறைகள் அமல்படுத்தப்படும். இதன் மூலம் முதியோரை சரியாக பராமரிக்கத் தவறுவோர்மீது தண்டனை விதிக்கவும், அவர்களுக்கு அபராதம் விதிக்கவும் ஏற்றவாறு குற்றவியல் சட்டம் திருத்தி அமைக்கப்படும்.

கோவிட்-19 தொற்று நோய்ப்பரம்பலால் பாதிக்கப்பட்ட இன்னொரு சமூகம் மன/உடல் நலம் குன்றியோர் ஆவர். இவர்களுக்கு அரச உதவிப் பணம் வழங்கும் முறையில் தற்போது முதியோருக்கு வழங்கும் வருமான உத்தரவாத மேலதிக பணம் (Guaranteed Income Supplement) இருப்பதுபோல் ஒரு திருத்தம் கொண்டுவரப்படும்.

காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த 2030ஆம் ஆண்டில் கனடா முழுவதும் வெளியிடப்படும் பசுமை வாயுக்களின் அளவை கனடாவில் 2005ஆம் ஆண்டில் வெளியான பசுமை வாயுக்களின் அளவிலும் பார்க்க 30% வீதம் குறைவாக இருக்குமாறு நாட்டில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

2050ஆம் ஆண்டிற்கு முன்னர் கனடிய உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பில், மற்றும் தொழிற்சாலைகளில் காபன் வாயுக்களின் வெளியேற்றத்தின் நிகர அளவு பூச்சியமாக வைக்கப்பட வேண்டும் எனச் சட்டமூலம் இயற்றப்படும். இதன்மூலம் காபன் வெளியேற்றத்தின் நிகர அளவைப் பூச்சியமாக

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

































# இமைய மலையில் புனித பயணம் – கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

இந்தியாவில் விஷ்ணுவின் உறைவிடமாக கருதப்படும் நான்கு பெரிய படைவீடுகள் யாதெனில்

(1) கிழக்கில் - பூரி ஜெகந்நாத்
(2) மேற்கில் - துவாரகை
(3) வடக்கில் - பத்ரிநாத்
(4) தெற்கில் - ராமேஸ்வரம்.

இதேபோன்று, இமைய மலையில் ஆதி சங்கராச்சாரியாரால் வரையறுக்கப்பட்ட நான்கு சிறிய படைவீடுகளாக வணங்கப் படும் புண்ணிய ஸ்தலங்கள் யாதெனில்

(1) யமுனோத்ரி
(2) கங்கோத்ரி
(3) கேதார்நாத்
(4) பத்ரிநாத்.

இந்தப் படைவீடுகளை தரிசிப்பதன் மூலம் மோட்சத்தை அடையலாம் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

இந்தியாவில் உள்ள புண்ணிய நதிகளில் முக்கியமானது கங்கை மற்றும் யமுனை. இந்த இரண்டு நதிகளும் உத்ராகாண்ட் மாநிலத்தில் உள்ள இமைய மலையில் உருவாகி பிரயாக்ராஜ் என்று அழைக்கப் படும் அலகாபாத் வரை பயணித்து பூமிக்கு அடியில் அந்தர்-வாகினியாக ஓடும் சரஸ்வதி நதியுடன் சங்கமமாகி மீண்டும் கங்கை என்ற பெயருடன் காசி வழியாகப் பயணித்து இறுதியாக கல்கத்தாவில் இருந்து 130 கிமீ தொலை விலுள்ள சாகர் தீவுக்கு அருகிலுள்ள வங்காள விரிகுடா கடலில் கலந்து தனது நெடுந்தூரப் பயணத்தை முடிவு செய்கின்றது.

இந்து புராணங்களின்படி, ராஜா பகீரதன் இமையமலையில் கங்கோத்ரி என்னும் இடத்தில் தவம் இருந்து சொர்க்கத்தில் ஓடிக்கொண்டு இருந்த கங்கையை பகவான் சிவபெருமானின் சடைமுடி வழியாக இங்கு இறங்கியதாகக் கருதப் படுகின்றது. கங்கோத்ரி கடல் மட்டத்தில் இருந்து 3,100 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு கங்கா தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்துக்கு அருகில் உள்ள பகீரதி ஷீலா என்று அழைக்கப்படும் புனித கல் பாறை, ராஜா பகீரதன் தவம் இருந்த இடத்தையும் கங்கை நதி முதன் முதலாகப் பூமியில் வந்து இறங்கிய இடத்தையும் நமக்கு நினைவுப்படுத்து கின்றது. ராஜா பகீரதனை நினைவுகூரும் வகையில் இந்த நதியைப் பகீரதி என்று அழைக்கப்படுகின்றது. இருப்பினும், தேவ் பிரயாகை என்னும் இடத்தில் பகீரதி நதியும் அலக்நந்தா நதியும் இணைந்து புனித கங்கையாக உருவாகி தனது பயணத்தை தொடர்கின்றது.

கங்கோத்ரியிலுள்ள புனித நீரை தீர்த்தமாக எடுத்து சென்று ராமேஸ்வரத்திலுள்ள சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வதை பக்தர்கள் வழக்கமாக கொண்டுள்ளனர். மகாபாரத காவியப் போரில் தங்கள் உறவினர்களின் மரணத்திற்குப் பரிகாரம் செய்வதற்காக பாண்டவர்கள் இங்கு வந்தனர் என்று நம்பப்படுகின்றது. கங்கோத்ரி வரை வாகனம் மூலம் செல்வதற்கு நல்ல சாலை வசதிகள் உண்டு.




கங்கோத்ரிக்கு பயணம் செய்யும்போது உத்தரகாசி என்னும் இடத்தில் பாகீரதி ஆற்றின் கரையில் பழமைவாய்ந்த காசி விஸ்வநாதர் ஆலயத்தையும் அதன் அருகில் அமைந்துள்ள தேவி பார்வதிக்கு அர்ப்பணிக்கப்பட்ட சக்தி கோவிலையும் கண்டிப்பாக தரிசிக்க வேண்டும். இந்த சக்தி கோயிலில் உள்ள 26 அடி உயரம் கொண்ட திரிசூலம் மிகவும் பிரபலமானது.

கங்கை நதியின் இரண்டாவது மிக நீளமான துணை நதியாக விளங்கும் யமுனை நதி கடல் மட்டத்தில் இருந்து 3,291 மீற்றர் உயரத்தில் உள்ள யமுனோத்ரி பனிபாறையில் இருந்து உருவாகின்றது. சூரியக் கடவுளின் மகளும், யமதர்மர் மற்றும் சனி பகவானின் சகோதரியுமான யமுனா தேவிக்கு இங்கு ஓர் ஆலயம் உள்ளது.

இந்த ஆலயத்தை சென்றடைவதற்கு ஜானகி சட்டி என்னும் இடத்தில் இருந்து 6 கி.மீ தூரம் ஏறுமுகமான மலை பாதையில் நடந்து அல்லது குதிரை மூலம் பயணம் செய்யவேண்டும். ஆலயத்துக்கு அருகிலுள்ள நீரூற்றுகளிலிருந்து

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# வேலை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வைத்திருப்பதற்காக வீடுகள் மற்றும் கட்டிடங்களைப் புனரமைப்புச் செய்யவும், வாகனங்களைப் புனரமைப்புச் செய்யவும் எனப் பல ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

கனடிய மத்திய அரசின் கட்டுப் பாட்டுக்குள் வரும் RCMP எனப்படும் நகர் காவலர் அமைப்பில் (Royal Canadian Mounted Police) புரையோடிப் போயிருக் கும் இனபாரபட்சத்தை மேற்பார்வை செய்து திருத்தங்கள் கொண்டுவரப் பொது மக்களைக் கொண்ட மேற்பார்வைக் குழு (Civilian Oversight) அமைக்கப்படும்.

கனடிய ஆளுநர் Julie Payetteஇன் சிம்மாசனப் பிரசங்கம் மூலம் வெளியிடப் பட்ட லிபரல் அரசின் திட்டங்கள் நாடாளு மன்றத்தில் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப் பிற்கு விடப்படும். இவ்வாக்கெடுப்பில் அரசு தோல்வியுற்றால் அரசாங்கம் கவிழ்ந்து நாட்டில் மீண்டும் பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

லிபரல் அரசு சிறுபான்மை அரசாக இருப்பதால், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற மூன்று எதிர்க்கட்சிகளில் ஏதாவது ஒன்றின் ஆதரவு லிபரல் அரசுக்குத் தேவை.



சிம்மாசனப் பிரசங்கம் முடிந்தவுடன் உரையாற்றிய பழமைவாதக் கட்சியின் துணைத்தலைவர் Candice Bergen இந்த சிம்மாசனப் பிரசங்கத்தில் எண்ணைவளத் தொழிலாளர்களை அரசு கைவிட்டுள்ளது என்றார். லிபரல் அரசு நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இரண்டாவது அமர்விற் காகப் பின்போட்டது, நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் முதலாவது அமர்வில் நடைபெற்றுவந்த பிரதமர் மீதான ஊழல் விசாரணைகளை நிறுத்துவதற்காகவே என்றார். இந்த லிபரல் அரசின் திட்டங்களில் நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு மீளக் கட்டியெழுப்புவது என்று கூறப்படவில்லை. இதனால் பழமைவாதக் கட்சி இந்த சிம்மாசனப் பிரசங்கத்திற்கு எதிராகவே நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் என்றார்.



சிம்மாசனப் பிரசங்கம் தொடர்பாக உரையாற்றிய புளக் குவிபெக்குவா கட்சித் தலைவர் Yves-François Blanchet லிபரல் அரசு குவிபெக் மாகாண அரசின் கட்டுப்பாட்டுக்குள் வரும் குழந்தை பராமரிப்பு மற்றும் ஆரம்பகால கற்றல் முறையில் மத்திய அரசு தலையிடுவது ஏற்கமுடியாது, அத்துடன் முதியோர் பராமரிப்பு இல்லங்களைக் கண்காணிப்ப தும் மாகாண அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள விடயம் என்றார்.

மாகாண முதல்வர்கள் கேட்டுக்கொண்ட மாதிரி, கனடிய மத்திய அரசு மாகாண அரசுகளுக்கு வருடாந்த மருத்துவப் பராமரிப்பு மற்றும் செலவுகளுக்காக எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் $28 பில்லியனைத் தராவிட்டால் புளக் குவிபெக்குவாக் கட்சி இந்த சிம்மாசனப் பிரசங்கத்திற்கு எதிராகவே நாடாளு மன்றத்தில் வாக்களிக்கும் என்றார். இவ்வாறு இரண்டு எதிர்க் கட்சிகளும் தமது கருத்தைத் தெரிவித்திருந்தனர். மூன்றாவது எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Jagmeet Singh சிம்மாசனப் பிரசங்கம் தொடர்பாக உரையாற்றுகையில் தமது கட்சி சிம்மாசனப் பிரசங்கத்தை ஆய்வு செய்த பின்னரே அதற்கு ஆதரவு அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பது பற்றி முடிவு செய்யும் என்றார். அத்துடன் தாம் கனடிய மத்திய அரசிடம் இருந்து இரண்டு உறுதி மொழிகளை எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

முதலாவது, அரசு CERB இற்குப் பதிலாகக் கொண்டு வரவிருக்கும் புதிய திட்டத்தில் வேலை இழந்தோரிற்கு CERB மூலம் பெற்ற உதவித் தொகையை விடக் குறைவான பணம் வழங்கப்படக்கூடாது. மற்றையது, நோய்வாய்ப்படும் தொழிலாளர் களுக்கு மத்திய அரசு சம்பளத்துடன் கூடிய இரண்டு வார சுகவீனகால விடுமுறை வழங்க வேண்டும் என்றார்.

லிபரல் அரசு சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவித்தது அரசின் கொள்கைகளும் திட்டங்களுமே. இவற்றை அரசு நடைமுறைப்படுத்தும் என்ற உத்தரவாதம் இவற்றை சட்டம் மூலமாக சமர்ப்பிக்கும் போது மட்டுமே தெரியவரும் என்றார்.

சிம்மாசனப் பிரசங்கத்தைத் தொடர்ந்து அடுத்த நாள் செப்ரெம்பர் 24இல் நாடாளு மன்றத்தில் வேலைவாய்ப்பு அமைச்சர் Carla Qualtrough 43ஆவது நாடாளு மன்றத்தின் இரண்டாவது அமர்வின் முதலாவது சட்ட மூலமான 'கோவிட்-19 பொருளாதார மீட்புச் சட்டம்' C-2ஐ சமர்ப்பித்தார். இதில் CERBக்குப் பதிலாக அரசு CRB என அழைக்கப்படும் 'கனடா மீட்பு உதவித் திட்டம்' (Canada Recovery Benefit) ஒன்றைப் பிரேரித்தது. இதில் வேலை இழந்தோருக்கு வாராந்தம் $500 உதவிப்பணம் 2020 செப்ரெம்பர் 27ஆம் திகதியிலிருந்து 2021 செப்ரெம்பர் 26ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வரும் 26 வாரங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இத்துடன் CRSB என அழைக்கப்படும்



Employment Minister - Carla Qualtrough

'கனடா மீட்பு சுகவீனகால உதவித் திட்டம்' (Canada Recovery Sickness Benefit) ஒன்றை அறிவித்தது. இதில் கோவிட்-19 தொற்றுநோய் ஏற்பட்டவர் அல்லது இரண்டு வாரகால தனிமைப்படுத்துதலுக்கு உள்ளாக்கப்பட்டவருக்கும் வாராந்தம் $500 உதவிப்பணம் இரண்டு வாரங்களுக்கு வழங் கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை இரண்டையும் விட மூன்றாவதாக CRCB என அழைக்கப்படும் 'கனடா மீட்பு கவனிப்புக்கால உதவித் திட்டம்' (Canada Recovery Caregiving Benefit) ஒன்றையும் பிரேரித்தது. இதில் சுகவீனமுற்ற குடும்ப உறுப்பினர் ஒருவரை பராமரிப்பதற்காகப் பணிபுரியும் ஒருவர் வேலைக்குச் செல்ல முடியாவிடில் அவருக்கு வாராந்தம் $500 உதவிப்பணம் 26 வாரங்கள் வரை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று திட்டங்களும் சேர்ந்து கோவிட்-19 தொற்று நோய்ப்பரம்பலால் பாதிக்கப்பட்டோருக்கும், அதைக் கட்டுப் படுத்த மத்திய அரசு எடுத்த நடவடிக்கை களால் வருமானம் பாதிக்கப்பட்டோருக்கும் படிப்படியாக தமது பொருளாதாரத்தை மீண்டும் வளம்பெறச் செய்ய உதவும் என ஊடகவியலாளர்களுக்கு அமைச்சர் Carla Qualtrough தெரிவித்தார்.

தொழில் அமைச்சர் Filomena Tassi ஊடக வியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் "இச்சட்டமூலம் கனடியத் தொழிலாளர் களுக்கான விதிமுறைகளையும் (Labour Code) மாற்றியமைக்கும் என்றார். இதன் மூலம் தொழிலாளர் கோவிட்-19 தொற்று ஏற்பட்டால் அல்லது இரண்டு வார காலம் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டால் அவர்களுக்கு வேலையில் இரண்டு வார கால விடுமுறை வழங்க வழிவகை செய்யும்" என்றார். இதன்மூலம் அவர் களது இடம் அவர்களுடைய வேலைத் தளத்தில் நிரப்பப்படாமல் பாதுகாக்கப்படும்.

இந்தச் சட்ட மூலங்களின் வரைவு லிபரல் அரசின் சிம்மாசனப் பிரசங்கத்திற்குப் புதிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவைப் பெற கொண்டுவரப்பட்டதா? என்ற ஊடகவி யலாளருடைய கேள்விக்குப் பதிலளித்த வேலைவாய்ப்பு அமைச்சர், "எமது அரசு கனடியர்களுக்குக் கோவிட்-19 தொற்று நோய்ப் பாதிப்பால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கு உதவி வழங்கும் என சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டி ருந்தது. அதை நிறைவேற்றுவதே இந்தச் சட்டமூலம்," என்றார்.

2020 செப்ரெம்பர் 27ஆம் திகதி முதல் வேலைகாலக் காப்புறுதியில் (EI) இருந்து பணம் பெறுவோருக்குக் கிடைக்கும் மிகக் குறைந்த உதவிப்பணம் வாரம் ஒன்றுக்கு $500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2020 செப்ரெம்பர் 27ஆம் திகதி முதல் வேலை இழந்து EI மூலம் பணம் பெறத் தகுதி அற்றவர்கள் அரசிடமிருந்து உதவிப் பணம் பெற CRB, CRSB அல்லது CRCB என்ற மூன்றில் தாம் தகுதிபெற்ற ஒரு முறை மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Jagmeet Singhஇனுடைய அரசியல் சாதுரி யத்திற்குக் கிடைத்த வெற்றி இதுவென ஊடகவியலாளர் இந்தப் புதிய சட்டமூலம் C-2ஐ கூறுகின்றனர். இதன்மூலம் ஒரு பொதுத் தேர்தல் உடனடியாக நடைபெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

## வாழ்க்கை குறுகியது, ஆனால் அழகானது...

* பேசித் தீருங்கள், பேசியே வளர்க்காதீர்கள்.
* உரியவர்களிடம் சொல்லுங்கள், ஊரெல்லாம் சொல்லாதீர்கள்.
* நடப்பதைப் பாருங்கள், நடந்ததைக் கிளறாதீர்கள்.
* உறுதி காட்டுங்கள், பிடிவாதம் காட்டாதீர்கள்.
* விவரங்கள் சொல்லுங்கள், வீண்வார்த்தை சொல்லாதீர்கள்.
* தீர்வை விரும்புங்கள், தர்க்கம் விரும்பாதீர்கள்.
* விவாதம் செய்யுங்கள், விவகாரம் செய்யாதீர்கள்.
* விளக்கம் பெறுங்கள், விரோதம் பெறாதீர்கள்.
* சங்கடமாய் இருந்தாலும், சத்தியமே பேசுங்கள்.
* செல்வாக்கு இருந்தாலும், சரியானதைச் செய்யுங்கள்.
* எதிர் தரப்பும் பேசட்டும் என்னவென்று கேளுங்கள், எவ்வளவு சீக்கிரம் தீர்வு வரும் பாருங்கள்.
* நேரம் வீணாகாமல், விரைவாக முடியுங்கள். யாரோடும் பகையில்லாமல், புன்னகித்து வாழுங்கள்.






## நாமும் நமது இல்லமும் 567

# கோவிட்-19 இன் பாதிப்பு தொடர்கிறது!



ராஜா மகேந்திரன், P.Eng
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

2020 ஜூன், ஜூலை, ஒகஸ்ற், செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் சந்தைப்படுத்தப்படும் ஆதனங்களின் எண்ணிக்கையும் அவற்றின் விலையும் எதிர்பாராத அளவிற்கு அதிகரித்துச் செல்கின்றது. கடந்த 100 வருடங்களில் குறைவான வட்டி வீதம் (மத்திய வங்கியின் இன்றைய வட்டி வீதம் 0.25%) முக்கிய காரணங்களில் ஒன்று. ஆனால் அரசினால் நிர்வகிக்கப்படும் Canada Mortgage and Housing Corporation (CMHC) என அழைக்கப்படும் அடமானக் கடனுக்குப் பாதுகாப்பு வழங்கும் நிறுவனமோ தனது எதிர்வுகூறலில் மிகவும் எதிர்மறையான ஆய்வுகளையும் கருத்துகளையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது.

செப்ரெம்பர் 2020இன் நடுப்பகுதியில் வெளியிட்ட தனது அறிக்கை யில் ஆதன விலை அதன் ஆகக்கூடிய விலையிருந்து 9% தொடக்கம் 18%வரை இறங்கலாமெனத் தெரிவிக்கின்றது. இதற்குப் பல உறுதியற்ற மற்றும் நிரந்தரமற்ற காரணிகளே காரணமாகத் தெரியப்படுத்துகின்றது.

ஆய்வு அறிக்கையில் தெரியவருவது ஜூன் 2020இலிருந்து ரொறொன்ரோ, மொன்றியல், ஒட்டாவா, மற்றும் தெற்கு ஒன்ராறியோவின் பகுதிகளில் ஆதன விலை எதிர்பார்ப்பதைவிட அளவுக்கு அதிகமாக அதிகரிப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. குறிப்பாக ரொறொன்ரோ, ஹமில்ரன் (Hamilton) பகுதிகளில் விலையில் இறக்கம் என்பது தவிர்க்க முடியாததாகவே காணப்படும். அரசின் அளவிற்கு அதிகமான சலுகைகள் உண்மை நிலைமையை மறைப்பதாகவே ஆய்வாளர்கள் தெரியப்படுத்துகின்றனர்.

2020 மார்ச் இல் மத்திய அரசு அமல்படுத்திய உதவித்தொகை வழங்கும் திட்டமான CERB என அழைக்கப்படும் கனடிய அவசரநிலை உதவித் திட்டம் (Canada Emergency Response Benefit), 2020 செப்ரெம்பர் 26ம் திகதியுடன் நிறைவு பெறுகிறது. இந்த CERB உதவித் திட்டம் மூலம் தகுதிவாய்ந்தவர்கள் மாதாந்தம் $2,000 அரச உதவித் தொகையைப் பெற்றனர். இக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டு புதிய நிலைப்பாடு எடுக்கப்பட இருக்கிறது.

தொழில் நிறுவனங்களுக்கு 2020 ஏப்பிரலில் மத்திய அரசு அமல்படுத்திய திட்டமான CEWS என அழைக்கப்படும் அவசரநிலை



ஊதிய மானியம்(Canada Emergency Wage Subsidy) 2021 கோடை காலம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. கோவிட்-19இன் பாதிப்பின் உண்மை நிலைமையை இதனால் அறியக்கூடியதாக உள்ளது.

அத்துடன் மாதாந்த அடமானக் கடனின் கொடுப்பனவு பின் போடப்பட்டதனால், அரசின் உதவிகள் கனடியர்களின் வருமானம் அல்லது அவர்களின் கையில் உள்ள பணத்தின் அளவு அதிகமாக இருப்பதாக ஒரு மாயத்தோற்றம். இதன் உண்மை நிலைப்பாடு விரைவில் தெரியவரும். கோவிட்-19இன் முழுப்பாதிப்பில் இருந்து அரசு இன்னமும் வெளிவரவில்லை. அண்மைக் காலமாய் கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இது இரண்டாவது அலையாகக் கொள்ளலாமா? அரசு இறுக்க நிலையை மீண்டும் ஏற்படுத்துமா?

மே 2020இல் CMHCஇன் அறிக்கையில், புதிதாக நிர்மாணம் செய்யப்பட இருக்கும் ஆதனங்களின் எண்ணிக்கை 70%வரை இறங்கியிருந்தது. ஆனால் ஒகஸ்ற் 2020 இல் இந்த எண்ணிக்கை கடந்த 13 வருடங்களுடன் ஒப்பிடும்போது அதிகமாக காணப்படுகிறது. ஆதனங்களின் விலை தொடர்ந்து கடந்த நான்கு மாதங்களும் அதிகரித்தே வருகிறது. ஆனால் அடிப்படைக் காரணிகளில் எதுவித மாற்றங்களும் ஏற்படவில்லை.

GTA பகுதியில் புதிய அடுக்குமாடி மனைகளின் சராசரி சதுர அடி விலை $1,000ஐ எட்டிவிட்டது. ஆனால் ரொறொன்ரோப் பகுதியில் இந்த எண்ணிக்கை ஏற்கனவே தாண்டியதனை விளம்பரம் பத்திரிகை வாசகர்கள் அறிந்திருப்பீர்கள்.

புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதனத்தில் முதலிடுவோர், எதிர்காலத்தில் அதாவது கோவிட்-19 இன் பிற்பாடு விலை அதிகரிக்கும் என்று கருதுவது நியாயமாகலாம். இதற்குரிய காலம் எவ்வளவு என்பதுதான் இன்றைய வினா?




ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்
போல் ஐன்ஸ்லி
வட்டாரம் 24, ஸ்காபரோ - கில்வூட்

TORONTO

உதவி தயாராக உள்ளது

தொகுதியில் வாழ்வோருக்கான ரொறன்ரோ நகரசபை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை

- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை • நூலகம்
- கட்டிட அனுமதிப்பத்திரம் • குப்பை அகற்றல்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம் • நகரசபைத் தேர்தல்
- அவசரகால வதிவிட வசதிகள் • தீயணைப்பு சேவை
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்

எனது சமூக தொடர்பு சாதனங்களும், வலையத் தளமும் தினமும் புதிப்பிக்கப்படுவதால், தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள பின்வரும் தகவல் சாதனங்களைப் பாவிக்கவும்.

Twitter: @Ainslie_Ward24 Instagram: @cllrainslie
Facebook: @ward24scarboroughguildwood

- "ஒன்ராரியோ வேலைகள்" நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள் • பொதுப் போக்குவரத்து
- நகர்காவலர் சேவை • மரங்கள்
- பொதுச் சுகாதார சேவை • குடிநீர்
- தெருக்கள் • ஆதன வரி
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி

பொது சுகாதார சேவை அலுவலகத்தின் தகவல் தொலைபேசி இலக்கமும் 311 என்ற இலக்கமும் அதி கூடிய அழைப்புக்களை ஏற்றுக்கொள்வதால், ரொறொன்ரோ மாநகரசபையின் www.toronto.ca/covid19 என்ற வலையத் தளத்தில் 53 மொழிகளில் உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

CONSTITUENCY OFFICE
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

TORONTO CITY HALL OFFICE
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: சூடு பிடிக்கும் வாக்குமூலங்கள்!

- விகிர்தன் -

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பிலான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், அண்மைய நாட்களில் அது சூடு பிடித்துள்ளது.

அக்கால கட்டத்தில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றியவரும் தற்போது கட்டாய விடுமுறையில் உள்ளவருமான பூஜித் ஜயசுந்தர இத்தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்து வரும் வாக்குமூலங்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்குப் பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

பூஜித் ஜயசுந்தர மற்றும், அப்போதைய பாதுகாப்பு செயலாளராகவிருந்த ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் மீதான விசாரணைகள் முடிவிற்கு வந்துள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் அண்மையில் பூஜித் ஜயசுந்தர தெரிவித்த தகவல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதே முழுக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளது.

நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறும், அவ்வாறு ஏற்றுக்கொண்டால் வெளிநாடொன்றின் தூதுவர் பதவி வழங்குவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னிடம் கோரியதாக விசாரணை ஆணைக்குழுவில் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கான பொறுப்பை தன்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், ஆனால், இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு தன்னிடம் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாக்குதல் தொடர்பில் தான் முக்கியமான அதிகாரிகளுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடல் பதிவுகள் யாவும் அழிக்கப்பட்டுள்ளதாக பூஜித் ஜயசுந்தர குற்றம்சாட்டியுள்ளார். இந்த சம்பவம் நிகழும்போது, இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் பொறுப்பதிகாரியாக மைத்திரிபால சிறிசேனவின் சொந்த சகோதரரே செயற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் அப்போதைய பாதுகாப்பு செயலாளர், புலனாய்வு அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினர்களுடன் சம்பவம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தியிருந்ததாகவும், தாக்குதல் நடத்தப்படுவதற்கு முந்தைய நாள் மாலை 5 மணியளவில், அரச புலனாய்வுத்துறையின் அப்போதைய பிரதானியான நிலந்த ஜயவர்தன தன்னுடன் தொலைபேசியில் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியதாக அவர் கூறியுள்ளார்.



வெளிநாட்டு புலனாய்வுத்துறையிடமிருந்தா மீண்டும் தகவல் கிடைத்தது என தான் அவரிடம் வினவியபோது, ஆம் என அவர் அதற்கு பதிலளித்திருந்ததாகவும் பூஜித் ஜயசுந்தர ஆணைக்குழுவிடம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரச புலனாய்வுத்துறை இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்களை திரட்டியுள்ளதா என தான் மீண்டும், நிலந்த ஜயவர்தனவிடம் வினவியபோது, தாம் சம்பவம் தொடர்பில் எந்தவித தகவல்களையும் திரட்டவில்லை என பதிலளித்திருந்ததாகவும் பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தின் பிரகாரம், அரச புலனாய்வுத்துறை வேறொரு தரப்பின் தகவல்களை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது என அவர் ஆணைக்குழுவிடம் எடுத்துரைத்துள்ளார்.

ஏப்ரல் 20ஆம் திகதி மாலை அப்போதைய பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோ தன்னிடம் தொலைபேசியூடாக அழைப்பை மேற்கொண்டு, நிலந்த ஜயவர்தன ஏதேனும் தகவலை வழங்கினாரா என வினவியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் சாட்சியம் வழங்கச் சென்றபோது, தான் அன்றைய தினம் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய விடயங்கள் எதுவும் தனது தொலைபேசி தரவு பட்டியலில் இருக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பூஜித் ஜயசுந்தர சாட்சியம் வழங்கியுள்ளார்.

தன்னுடைய தொலைபேசி தரவுப் பட்டியல் பதிவுகளை தவிர, ஏனைய அனைத்து தரப்பினரதும் தொலைபேசி தரவு பட்டியல்கள் அங்கு காணப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

தான் ஒவ்வொரு தொலைபேசி அழைப்புக்களையும் மேற்கொள்ளும் போது, தொலைபேசி அழைப்பில் ஒரு சத்தம் கேட்டதாகவும், தனது தொலைபேசி அழைப்புக்களை ஊடுருவியிருந்தமை



யினாலேயே தொலைபேசி அழைப்பில் அவ்வாறு சத்தம் கேட்டதாகவும் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். அத்துடன், தனது வீட்டிற்கு முன்பாக அரச புலனாய்வுத் துறையின் அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு, தன்னை அவதானித்து வந்திருந்ததாகவும் பூஜித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் யார் மீது குற்றம் சுமத்த முயற்சிக்கின்றீர்கள்? என ஜனாதிபதி ஆணைக்குழுவினர் அவரிடம் கேட்டபோது, அப்போதிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவருடன் தொடர்புடைய அதிகாரிகள் மீதே தான் குற்றம் சுமத்துவதாக நேரடியாகவே அவர் கூறினார்.

தெஹிவளையில் தற்கொலை குண்டை வெடிக்கச் செய்த ஜம்மில் மொஹமட் என்பவர் குறித்தும் சில முக்கிய தகவல்களை பூஜித் ஜயசுந்தர ஆணைக்குழுவிடம் வெளிப்படுத்தியுள்ளார். தாஜ்சமுத்ரா ஹோட்டலிலிருந்து தெஹிவளைக்கு வந்த ஜம்மில் அரச புலனாய்வுத்துறையிலுள்ள அதிகாரி ஒருவரை அவர் சந்தித்துள்ளதாகவும், அவ்வாறு ஜம்மில் என்பவருடன் அரச புலனாய்வுத்துறைக்கு தொடர்புகள் இருந்திருக்குமானால், சஹ்ரான் குறித்தும் தகவல்கள் தெரிந்திருக்க வாய்ப்புள்ளதாக பூஜித் ஜயசுந்தர கூறியுள்ளார். அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே சஹ்ரான் உள்ளிட்ட தரப்பினரை கைது செய்ய முடியாது போனதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பூஜித் ஜயசுந்தரவின் வாக்குமூலங்களில் முழுவதுமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிவைக்கப்பட்டுள்ளமை வெளிப்படையாகவே தெரிகின்றது. அதுமட்டுமன்றி இத்தாக்குதல் தொடர்பில் பொறுப்புக் கூறுபவராக மைத்திரிபால சிறிசேனவே காணப்படுகின்றார். மைத்திரியும், முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இப்பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியாது என்று நல்லாட்சி அரசாங்கத்திலிருந்தவர்களே தற்போது கூறிவருகின்றமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

இந்நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதியும், முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஒக்ரோபர் 6ஆம் திகதியும் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர். இதன்போது, தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நிச்சயமாக பதிலளிக்கப்போவதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றனர். ஆனால், பூஜித் ஜயசுந்தர முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கு மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாக எவ்வித கருத்துக்களையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

இதேவேளை, ஆணைக்குழுவில் வாக்குமூலம் அளிக்கையில் பல முக்கிய விடயங்களை வெளிப்படுத்த தானும் தயாராகவுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தெரிவித்துள்ளார். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்ற விசாரணை நடவடிக்கைகள் குறித்து விசனம் தெரிவித்து வந்த கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் எனத் தற்போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார். விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு தற்போது சிறப்பாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு உண்மையில் என்ன காரணம்..? யார் காரணம்..? தாக்குதல்களுக்கு அரசியல் பின்னணிகள் உள்ளனவா..? சஹ்ரான் என்பவர் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டவரா..? என்பது போன்ற பல கேள்விகள் உள்ளன. இதற்கான விடை

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இணைந்த செயற்பாடு தொடர்ந்தால் நல்லது!




தியாகி திலீபனை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்த அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட தடை தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க உதவியுள்ளது. இந்த முயற்சியை முன்னெடுத்தவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா என்பதை முதலில் குறிப்பிட வேண்டும்.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் திலீபனுக்கான நினைவேந்தல் நினைவுகள் ஏற்பாடு செய்யப்பட்ட போது அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பொலிஸார் நீதி மன்றத்தின் ஊடாக அதற்கு தடை உத்தரவைப் பெற்றனர். இதனால் நீதிமன்ற உத்தரவை மீறி திலீபனுக்கான நினைவுகூரல் நிகழ்வுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இந்தத் தடைகளுக்கு எதிராக மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டாக செயற்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கில் மாவை சேனாதிராஜா தமிழ் தேசியத்தை முன்னிறுத்தும் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

கடந்த 18ஆம் திகதி மாலை நல்லூர் இளம் கலைஞர் மன்றத்தில் தமிழ் கட்சிகள் ஒன்றுகூடின. தமிழ் மக்கள் மரணித்த தங்கள் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமையை வழங்க வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கூட்டாகக் கோரிக்கை விடுப்பதென அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பங்காளிக் கட்சிகளுடன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் உள்ளிட்ட பல அமைப்புகள் கலந்து கொண்டன.

உடனடியாகப் போராட்டங்கள் எதனையும் முன்னெடுப்பதில்லை எனவும், ஜனாதிபதி யிடமும் பிரதமரிடமும் முதலில் கோரிக்கை களை முன்வைத்து அவர்களின் பதிலைப் பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கையைத் திட்டமிடுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

19ஆம் திகதி ஜனாதிபதிக்கும் பிரதமருக் குமான கடிதத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் 14 முக்கியஸ்தர்கள் கையொப்பமிட்டனர். வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் இல்லத்தில் அன்றைய தினம் ஒன்றுகூடிய தமிழ் தேசியம் சார்ந்த அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து கையெழுத்திட்டனர்.



இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), புளொட், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசியக் கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகிய கட்சிகள் கையெழுத்திட்டன.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, சீ.வீ.கே.சிவஞானம், சிவஞானம் சிறிதரன், ரெலோ சார்பில் குருசுவாமி சுரேந்திரன், புளொட் சார்பில் பா.கஜதீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ. கஜேந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சி சார்பில் எம்.கே.சிவாஜிலிங்கம், என். சிறீகாந்தா, ஈழத் தமிழர் சுயாட்சின் கழகம் சார்பில் அனந்தி சசிதரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் சி.சிற்பரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சார்பில் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர்.

இக்கடிதத்திற்கு பதிலேதும் கிடைக்கப் பெறாத நிலையில், திலீபனின் நினைவு தினமான 26ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்தன. இதனையும் தடைவிதிக்க பொலிஸார் அவசர அவசரமாக நீதிமன்றில் தடையுத்தரவைப் பெற்றனர். எனினும், குறித்த நாளில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெறும் என தமிழ் தேசியக் கட்சிகள் அறிவித்தன. எந்த இடத்தில் இது நடைபெறும் என்பது முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், திலீபனின் நினைவுதின மான கடந்த 26ஆம் திகதி சாவகச்சேரி யில் இந்த நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது. சாவகச்சேரி சிவன் ஆலய முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. ஒன்றிணைந்த தமிழ் கட்சிகளைச் சேரந்த அனைவரும் அங்கு வந்து உண்ணா விரதப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். பொலிஸார் நீதிமன்றத் தடையைப் பெறும் முன்னரே திடீரென நிகழ்வு ஆரம்பமான தால் அவர்களால் எதனையும் செய்ய முடியவில்லை. எனினும், அங்கு வந்தோரை அச்சுறுத்தும் விதமாக பொலிஸாரும் அவர்களுடன் வந்திருந்த புலனாய்வுப் பிரிவினரும் நடந்துகொண்டனர். அனால், எவ்வித பிரச்சினையுமின்றி வெற்றிகரமாக அன்றைய நிகழ்வு நிறைவுற்றது.

அடுத்த நடவடிக்கையாக 28ஆம் திகதி வடக்கு கிழக்கில் ஹர்த்தால் ஒன்றிற்கு தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளால் ஒன்றிணைந்து அழைப்பு விடுக்கப்பட்டது. அன்றைய தினம் வடக்கில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. கிழக்கி லும் ஓரளவிற்கு கடையடைப்பு மேற் கொள்ளப்பட்டிருந்தது. அந்த வகையில் வெற்றிகரமாகவே அந்தப் போராட்டமும் நிறைவடைந்துள்ளது.

திலீபனை முன்னிறுத்தி மேற்கொள்ளப் பட்ட அரசாங்கத்திற்கு எதிரான போராட் டங்கள் யாவுமே தனியொரு கட்சியால் மேற்கொள்ளப்படாமல் அனைத்து தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளின் கூட்டு நடவடிக்கையினால் மேற்கொள்ளப்பட்டமை தமிழ் மக்களால் வரவேற்கப்படுகின்றது.

தமிழ் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் தொடர்ச்சியான எதிர்பார்ப்பாக இருந்தும் அதனை தமிழ் கட்சிகள் உதாசீனம் செய்யும் வகையிலேயே கடந்த காலத்தில் நடந்துகொண்டுள்ளன. தமிழ் அரசியவாதிகளின் முரண்பாட்டால் கட்சி கள் யாவும் துண்டு துண்டாக உடைந்தன. அதற்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் சிறந்த பிடிப்பினையை வழங்கியிருந்தனர்.

இப்போது, திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டுள் ளன. இவ்வாறானதொரு ஒன்றிணைந்த செயற்பாடு உடனடியாக சாத்தியப்படும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், கடந்த காலங்களில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தலின் போது கூட கட்சிகள் தனித்தனியாக நிகழ்வுகளை நடத்தியிருந்தமை நினைவுகொள்ளத்தக்கது.

தனியொரு கட்சி வடக்கு கிழக்கு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருக்கு மானால் அது இந்தளவிற்கு வெற்றி பெற்றிருக்காது என்பதை குறிப்பிட வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள இந்த இணைந்த செயற்பாட்டிற்கு தமிழ் மக்கள் வழங்கிய வரவேற்பே இது என்பதை மறுதலிக்கவியலாது.

ரணில் - மைத்திரி இணைந்த ஆட்சிக் காலத்தின் ஐந்து வருடங்களும் தமிழ் பிரதேசங்களில் இடம்பெறும் நினைவுகூரல் செய்பாடுகளுக்கு எவ்வித தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை. மாவீரர் நாள் நிகழ்வுகள் கூட மக்களால் கடைப்பிடிக்கப் பட்டன. அதற்கு முன்னதாக மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில் தடைகள் இருந்தன. நவம்பர் மாதம் முழுவதுமே படைத்தரப்பின் கண்காணிப்பிலிருக்கும். கோவில்களிலும், வீடுகளிலும் கார்த்திகை தீபமேற்றும் சமய நிகழ்வுகளுக்குக் கூட தடைவிதிக்கப்பட்டிருந்தது.



இப்போது மீண்டும் அந்த அரசாங்கம் வந்துள்ள நிலையில், எதிர்வரும் நவம்பர் மாதமும் மோசமானதாகவே அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலை யில் மாவீரர் நாளில் போரில் உயிரிழந்த போராளிகளான தங்கள் பிள்ளைகளை நினைவுகூரும் நிகழ்வுகளை தமிழ் மக்கள் மேற்கொள்ள முடியுமா என்பது சவாலான விடயமே. இக்கட்டத்தில் ஒன்றிணைந்த தமிழ் கட்சிகள் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை எவ்வாறு அமையப் போகின்றது?

தமிழ் கட்சிகள் மத்தியில் உள்ள முரண் பாடுகள் களையப்பட்டு ஒரு குடையின் கீழ் ஒரே அமைப்பாக செயற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம் மட்டுமல்லாது அது காலத்தின் தேவையாகவும் உள்ளது. அதற்கு முன்னோடியாக இந்த இணைந்த செயற்பாடு அமைந்தால் நல்லது.



# ரொறொன்ரோ நகரசபையினால் தமிழ்ச் சமூக மையத்திற்கான அமைவிடம் அறிவிப்பு

ரொறொன்ரோ நகரசபையின் நில-ஆதனப் பகுதியின் (City of Toronto's real estate division) ரொறொன்ரோ நகரவாக்கச் சபை (Create TO), 311 ஸ்ரெயின்ஸ் வீதியில் அமைந்துள்ள (அண்ணளவாக 16,722 சதுர மீற்றர் பரப்பளவுள்ள) நிலத்தை எதிர்காலத்தில் தமிழ்சமூக மையம் அமைவதற்கான இடமாக நகரசபைக்குப் பரிந்துரைத்துள்ள செய்தியை எமது தமிழ்ச் சமூக மைய முன்னெடுப்புக் குழுவானது உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றது.

ரொறொன்ரோ நகரவாக்கச்சபை மேற்குறிப் பிட்ட பரிந்துரையை செப்ரெம்பர் 28, 2020 அன்று நகரசபையின் உபகுழுவிற்குச் சமர்ப்பித்துள்ளது. அதை இங்கு வாசிக்க லாம். இது ரொறொன்ரோ நகரசபை உபகுழுவினால் ஒக்ரோபர் 5ஆம் திகதி, 2020 இலும், ரொறொன்ரோ நகரசபையி னால் ஒக்ரோபர் 27, 2020இலும் அங்கீ காரத்துக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நாம் இந்த நிலத்தை மிகக்குறைந்த வாடகையில், வருடம் ஒன்றுக்கு ஒரு டொலர் (அத்துடன் HST - இக்கட்டணத் துக்கான ஒருங்கிணைந்த விற்பனை வரியும் சேர்த்து) எனும் குத்தகைக் கட்டணத்தில் எமக்குப் பெற்றுகொள்வதற் காக ரொறொன்ரோ நகரசபையுடனும், நகரசபை முதல்வரின் அலுவலகத்துடனும், நகரசபை உறுப்பினர் மக்கெல்வி அவர்களுடனும் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடனும் கடந்த ஒருவருட காலமாக நெருக்கமாகச் செயற்பட்டு வந்துள்ளோம்.

"தமிழ்ச்சமூக மையத்துக்கான இடத்தை இனங்காண்பதற்காக நகரசபையானது முழுத் தமிழ்ச்சமூகத்துடனும் இணைந்து செயற்பட்டது" என்று நகரசபை முதல்வர் ஜோன் ரோறி கூறியுள்ளார்.

"இந்த அமைவிடத்தை பெற்றுக்கொள் வதுடன் மட்டுமல்லாது இவ் வருங்காலக் கனவை நனவாக்கலிலும் இதே அயராத அர்ப்பணிப்புடன் கூடிய கடின முயற்சி தேவை. தமிழ்ச்சமூகத்தின் இம் முயற்சிக்கு எனது முழுமையான ஆதரவு உண்டு. நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து உழைத்து இத் தமிழ்ச்சமூக மையத்தை உங்கள் முன்னிலைக்குக் கொண்டு வருவோம் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ரொறொன்ரோ நகர சபை யானது நகரவாக்கச் சபையினூடாக 311 ஸ்ரெயின்ஸ் வீதியில் உள்ள நிலத்தை தமிழ்ச் சமூக மைய அமைவிடத்துக்கு வழங்க முன்வந்தமையையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். கனடியத் தமிழர் மட்டுமல்லாது ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வாழும் ஏனைய சமூகத்தினரும் இங்கு அமையவுள்ள சமூக மையத்தின் விளையாட்டு, பண்பாட்டு, பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களினால் பயனடைவர். இக்கனவினை நனவாக்கும் முயற்சியின் அடுத்த கட்ட நடவடிக்கை களில் பங்கேற்று உங்களுடன் இணைந்து செயற்பட நான் ஆவலாக உள்ளேன்" என்று நகரசபை உறுப்பினர் ஜெனிபஃர் மக்கெல்வி தெரிவித்துள்ளார்.

311 ஸ்ரெயின்ஸ் வீதியில் உள்ள இந்த உபரி நிலமானது ரொறொன்ரோ நகர சபையினால் ஒரு சமூக மையத்தின் கட்டு மானத்துக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனமாகும். இது வெற்று நிலமாக இவ்வளவு காலமும் இப்படி ஒரு சந்தர்ப் பதிற்காகக் காத்திருந்தது. இந்த அமை விடம் தமிழர் செறிந்து வாழும் ரொறொன்ரோ, மார்க்கம், டுறம் ஆகிய பகுதிகள் யாவற்றுக்கும் மையமாக அமைந்துள்ளமை குறிப்பித்தக்கது. இப் பகுதியில் சமூக மையங்கள், அத்தியாவ சிய சமூக சேவைகள் ஆகியவற்றின் பரம்பல் மிகவும் குறைவாகவே உள்ளமை யை இப்பகுதியில் செயற் பாட்டில் உள்ள இவற்றின் பரம்பலை மேலோட்டமாகப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம்.


நாம் கடந்த 2019 நொவம்பர் மாதத்தில், கனடிய மத்திய அரசினதும், மாகாண அரசினதும் சமூக, பண்பாட்டு, பொழுது போக்கு உள்ளகக் கட்டுமான முதலீட்டுத் திட்டத்தின் கீழ் எமது சமூகமையக் கட்டுமானப் பணிக்கு நிதிஒதுக்கீடு கோரி விண்ணப்பித்திருக்கின்றோம். இவ்வருட இறுதிக்குள் இதற்கான பதிலை இவ் அரசாங்கங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

நாம் இது சம்பந்தமான விடயங்களை உங்களுக்கு அறியப்படுத்தி வருவோம். இதேவேளை எமது முயற்சிகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும், எமது செயற்திட்டங்களில் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்விடப் பரம்பல் பற்றிய புள்ளிவிபர ஆய்வுடன் கூடிய வரைபடம், இணைய வழியில் மக்களிடம் நாம் நடத்திய கருத்துக்கணிப்புகள், ஸ்காபரோ வில் சமுதாய மையம் அமைவதற்கான தேவைகள் பற்றி அறிந்துகொள்ளவும் www.tamilcentre.ca என்னும் எமது இணையத்தளத்தை நாடுங்கள்.

மேலதிக ஊடக தகவல்களுக்கு:
நீதன் சண்
416-824-3399 /neethanshan@gmail.com

• மனிதன் எவ்வளவு அழகாக பொய் வேடம் போட்டாலும் காலமும் நேரமும் சூழ்நிலையும் அவனது இயல்பு குணத்தைக் காட்டிக் கொடுத்துவிடும் இதுதான் உண்மை.

• சரியோ தவறோ தைரியமாக எதையும் வெளிப்படையாகப் பேசக்கூடியோர் யாருக்கும் துரோகியாக மாறமாட்டார்கள்..



# உயிர்த்த...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

கள் நாட்டு மக்களுக்குத் தெரியவர வேண்டும். அரசியல்வாதிகளாக இருந்தாலும், பாது காப்புத் தரப்பினராக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும் குற்றவாளி கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

# இமைய...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

வெளியேறும் சூடான நீர் இங்குள்ள சூர்ய குண்டத்தை வந்தடைகின்றது. பக்தர்கள் சூர்யகுண்டத்தில் புனித நீராடிவிட்டு இந்த குண்டத்தில் துணியில் அரிசியை கட்டி வைத்து அது சாதமான பின்னர் அதை பிரசாதமாக எடுத்துச் செல்கின்றனர்.

கங்கோத்ரி, யமுனோத்ரி, கேதார்நாத் மற்றும் பத்ரிநாத் புனித யாத்திரையுடன் ஹரித்வார்-ரிஷிகேஷ் மற்றும் வழியில் அமைந்துள்ள முக்கியமான ஆலயங் களை சொகுசு வாகனம் மூலம் சென்று தரிசிப்பதற்கு டெல்லியில் இருந்து குறைந்தபட்சம் 12 நாட்கள் தேவை. இந்த புனித யாத்திரையை மேற்கொள்வதற்கு மே, ஜுன், செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்கள் மிகவும் சிறந்த காலமாகும். அடுத்த இதழில், இந்தியாவின் தலை நகரமான டெல்லியின் வரலாறு மற்றும்



முக்கியமான ஆலயங்களைப் பற்றிய தகவல்களை காணலாம்.

# பாலுவே உன்னிசையை நிறுத்திவிட்ட தேனையா!



ஏழு சுரங்களும் ஏக்கமுடன் தவிக்கிறது
பாலுவே நீயும் பாட வருவாயா
தாளலயம் அத்தனையும் தவிக்கிறதே பாலு
நீயெழுந்து வாராயோ நெஞ்சலாம் அழுகிறதே!

மூச்சுவிடா பாடியே சாதனையைக் காட்டினாய்
மூச்சுவிட்டு அஞ்சலியைப் பாடவைத்தாய் பாலுவே
காற்றுக்கூட கலங்கியே அழுகிறதே பாலுவே
கட்டழகுச் சிரிப்புமுகம் காண்பதுதான் எப்போது!

சுந்தரத் தெலுங்கு சொக்க வைக்கும் தமிழென்று
இந்திய மாநிலத்தில் இருக்கின்ற மொழியெல்லாம்
வந்தமைந்த உன்னிசையால் வாரியே வழங்கினையே
பாலுவே உன்னிசையை நிறுத்திவிட்ட தேனையா!

பாலுநீ பாடவேண்டும் பலபேரும் கேட்கவேண்டும்
வாழவைக்கும் இசைவழங்க வரவேண்டும் எனநினைத்தோம்
ஆழநிறை காதலுடன் பார்த்திருந்தோம் பாலுவே
அழவிட்டு போனதேனோ அலமந்து நிற்கின்றோம்!

உன்னிசையைக் கேட்பதற்கு உலகமே காத்திருக்க
உன்பிரிவைக் கேட்டவுடன் உணர்விழந்தே நிற்கின்றோம்
மண்ணகத்தில் இசைகொடுக்க வந்துநின்றாய் வரமாக
எண்ணமெலாம் உன்நினைப்பே நிறைந்திருக்கே பாலுவையா!

பாடும் நிலவாகப் பவனிவந்தாய் பாலுவே
பாடல்தர விரைவாக வந்திடுவாய் எனநினைத்தோம்
ஆடிவரும் தென்றலிலும் ஐயாவுன் குரலிருக்கும்
ஆடலின்றி பாடலின்றி ஐயாநீ போனதேனோ!

கற்பனையும் அழுகிறது கவிதைகளும் அழுகிறது
காந்தக் குரலோனோ காலனுனைக் கவர்ந்தானே
கலையுலகம் அழுகிறது கலைஞரெலாம் கதறுகிறார்
கண்ணீரை உந்தனுக்கு காணிக்கை ஆக்குகிறோம்!

அரங்கமெலாம் வெறுமையாய் ஆகிருக்கு பாலுவே
அரங்கதிரும் உந்தனிசை அடங்கியதே பாலுவே
அழவைக்கப் பாடினாய் ஆடிவைக்கப் பாடினாய்
அனைவருமே ஆடிநிற்க அழவிட்டு போனதேனோ!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# கோவிட் தொற்றுநோய் காலநிலை மாற்றம் அடைவதைக் குறைக்குமா?



ஞா. ஆரணி

கோவிட்-19 தொற்று நோய்ப்பரம்பலின் ஆரம்பகாலத்தில் வீட்டில் அனைவரும் இருந்தபடியினால் கார்பன் வாயுக்களின் உமிழ்வு குறைந்தது. உதாரணத்திற்கு சீனாவில் நிலக்கரியைப் பாவித்துத்தான் பெரும்பாலும் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. கோவிட்-19 தொற்றால் பணிகள் நிறுத்தப்பட்டதால் சீனாவில் வெளியிடப்படும் கார்பன் வாயுக்களின் உமிழ்வு 25% குறைவடைந்தது. இதே



போல் பல நாடுகளிலும், நகரங்களிலும் சுற்றுப்புறச் சூழல் மாசு குறைந்து நீலநிற வானம் காட்சியளித்தது.

இதனால் பல நன்மைகள் உண்டானது. ஆனால் சில பிழையான செய்திகளும் பரவின. உதாரணத்துக்கு இத்தாலியின் வெனிஸ் நகரில் தண்ணீர் சுத்தமாக மாறிய படியால் அங்கு அன்னப் பட்சிகள் திரும்பி வந்து விட்டன எனப் பல இணைய தளங்களில் படங்களுடன் செய்திகள் பரவின. ஆனால் கோவிட் நோய் வருவதற்கு முன்னமே அந்த இடங்களுக்கு அன்னங்கள் வழக்கமாக வந்து சென்றன.

இதனால் கோவிட் தொற்றுநோயால் இயற்கைக்கு நிரந்தரமான நன்மைகள் ஏற்பட்டனவா என சந்தேகம் வருகிறது. கோவிட் நோய்ப் பரவலை தடுப்பதற்காக பலர் மீண்டும் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும் plastic பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். பல வியாபார நிறுவனங்கள் பலமுறை பாவிக்கக்கூடிய cups ஐயும் bagsஐயும் தடை செய்தன.

அப்போது வைரஸ் பரவும் முறை தெரியாதபடியால் இவை தடை செய்யப்பட்டன. ஆனால் இப்போது திரும்பப் பாவிக்கக் கூடிய பொருட்களாலும் ஒரு முறை பாவித்து எறியும் பொருட்களாலும் கோவிட் நோய் பரவும் விதத்தில் மாற்றமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது வைரஸ்



plastic இலும் உலோகங்களிலும் கிட்டத் தட்ட ஒரேயளவு நேரம் தொற்றக்கூடிய நிலையில் இருக்கும். அத்தோடு திரும்பிப் பாவிக்கும் பொருட்கள் சவர்க்காரம் பாவித்துக் கழுவப்படுவதால் வைரஸ் அவற்றில் அழிக்கப்படுகின்றது.

நாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பும் போது மக்களின் செயல்களில் மாற்றம் இல்லாதபடியினால் சுற்றுப்புறச் சூழல் மாசு முதலிருந்த அளவிற்குத் திரும்புமென சீனா போன்ற நாடுகளின் உதாரணத்தால் நம்பப் படுகிறது. நாடுகள் தங்களது பொருளா தாரத்தை மீண்டும் வளர்க்க, சூழலை இன்னும் அதிகமாக மாசுபடுத்துவர் எனச் சிலர் அஞ்சுகின்றனர்.

இதற்குத் தீர்வாக பசுமை வளர்ச்சி மீள்ப்பு (green recovery) உருவாக வேண்டுமெனக் கூறப்படுகிறது. அதாவது கோவிட் தொற்று நோய் நீங்கியபின் வேலை மீண்டும் தொடங்கும்போது அவ்வேலைகள் காபன் வாயுக்களின் உமிழ்வைக் குறைக்கும் படியாகவும் சூழலைச் சுத்தம் செய்ய உதவும் படியாகவும் அமைய வேண்டும்.

உதாரணத்துக்கு, கனடா அரசாங்கம் அடுத்த வருடம் ஒரு முறை மட்டும் பாவிக்கப்படும் plastic பொருட்களைத் தடை செய்யப் போவதாகவும் மீளப் பாவிக்கக் கூடிய சக்தியிலும் (renewable energy) சூழலைக் காக்கும் துறைகளிலும் முதலீடு செய்யப் போவதாகவும் அறிவித்திருக்கிறது.

கோவிட் நோயை எதிர்த்தது போல் உலக மக்கள் ஒன்று சேர்ந்து சூழல் மாசு அடைவதையும் எதிர்த்தால்தான் காலநிலை மாற்றம் அடைவதைக் குறைக்கலாம்.


விளம்பரம்
VLAMBARAM

30 ஆவது ஆண்டில்


பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email: vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# சித்தியும் பெற்றார்! சிகரமும் தொட்டார்!



காந்தி ஜெயந்தி - 02.10.2020

பாரத தேசம் பசுமை இழந்து
பகைவரின் ஆட்சியில் சிக்குண்டு
சீரழிந்து சிதைந்திருந்த காலம்
சிந்திய ரெத்தமும் கண்ணீருமாய் மக்கள்
ஈரமிலாத ஆங்கிலேயனுக்கு அடிமைகளாய்
இழிநிலையில் வாழ்ந்திருந்த நேரம்
தீரமுடன் விடுதலைக்காய் போராடிய தியாகிகள்
தீயோரின் வெஞ்சிறையில் வாடிய காலம்!

கொஞ்சும் அழகுடன் போர்பந்தரென்னுமிடத்தில்
கொடியதுயர் நீக்கக் காந்தி பிறந்தார்
பிஞ்சுமனதிலே பிரியம் வளர்த்தார்
பிழையறவாழும் அறிவையும் பெற்றார்
நெஞ்சுநிறைய அன்னையின் பாசம்
நெகிழ்ந்து போவார் அவரின் பேச்சால்
விஞ்சிய அறிவால் கல்வியில்மேன்மை
விரும்பியே கற்றுப் பாரிஸ்டரானார்!

சத்தியம் நேர்மை சமாதானம்
சகத்தினை வெல்லும் வழியெனக் கண்டார்
கத்தியால் விடுதலை பெற்றிடலாகா
கருணையால் யாவையும் பெற்றிடல்கூடும்
புத்தியைக் கொண்டு அகிம்சையெனும்
புதிய ஆயுதம்தனை ஏந்தியகாந்தி
சித்தியும் பெற்றார் அடிமை விலங்குடைத்து
சிகரமும் தொட்டார் மக்கள் மனதில்!

வெள்ளையருக்கு அடிமையாகி மக்கள்
வெந்துநொந்து நிதம்வாடக் கண்டே
உள்ளம்நொந்தார் காந்தி உருகிநின்றார்
உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபட்டார்
எள்ளளவும் வன்முறைகள் தீண்டாமல்
எளிமையான அறவழியில் செல்லவெண்ணி
வெள்ளமென மக்களை ஒன்றுதிரட்டி
வேதனை தரும் உண்ணா நோன்பை
ஆரம்பித்தார்!

வெள்ளையருக் கெதிரான அறவழிப் போராட்டம்
வெற்றியின் பாதைக்கு இட்டுச்செல்ல
கொள்ளை லாபம் ஈட்டிய அந்நியப்பொருள்களை
கொஞ்சமும் மக்கள் வாங்கிடாது தடுத்தே
பிள்ளையிலிருந்து பெரியோர் வரை உள்நாட்டு
பெருமைமிகு கதராடை அணியவைத்தார்
முள்ளை முள்ளால் எடுப்பது போல்
முட்டிமோதாமல் நாட்டை மீட்டெடுத்தார்!

படித்து பட்டம் பெற்று பாரிஸ்டராகியும்
பதவியாசை ஏதுமின்றி வாழ்நாளெல்லாம்
அடித்தட்டு மக்களின் துயர் துடைக்கவும்
அடிமைத்தளை அறுத்து நாட்டைக் காக்கவும்
கொடியவெள்ளைக் கொக்குகளை எதிர்த்து
கொஞ்சம் கதராடை இடுப்பில் கட்டிநீண்ட
தடியொன்று மட்டுமே கையிலூன்றி எளிமையோடு
தரணி போற்ற வாழ்ந்தவர்தான் காந்திமகான்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

mhc

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSEVEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGETHERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsilitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தமிழில் தொடர்ந்து நடிப்பேன்!

**நேர்காணல் - மஞ்சு வாரியார்   நேர்கண்டவர் - கண்ணன்**

கேரளாவின் மஞ்சள் வெயில் மல்லுவுட்டின் லேடி சூப்பர் ஸ்டார் மலையாளிகளின் மனம் கவர்ந்த நட்சத்திர நாயகி, மஞ்சு வாரியர். கடவுளின் தேசத்தில் தனக்கென ஓர் இடத்தை அவர் உருவாக்கி இருந்தாலும் தமிழ் திரையுலகில் அவர் நடிப்பதற்கு 20 வருடங்கள் ஆகியிருக்கிறது. வெற்றிமாறன் இயக்கிய 'அசுரன்' படத்தில் தனுஷின் மனைவியாக மஞ்சு வாரியர் நடிப்பை பார்த்த எவரும், தமிழ் திரையுலகு இத்தனை காலமும் அவரை பயன்படுத்தாததால் இழப்பை சந்தித்துள்ளது என்றே எண்ணுவர். சமீபத்தில் சென்னை வந்திருந்த மஞ்சு வாரியரை 'விளம்பரம்' இதழுக்காக சந்தித்தோம்.

**மல்லுவுட் டு கோலிவுட் பயணம் எப்படியிருக்கிறது?**

நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாம் தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில்தான். அதனால், தமிழ் சரளமாகப் பேசுவேன். தமிழில் நடிக்க நிறைய வாய்ப்புகள் வந்தது. ஆனால், சில காரணங்களினால் நடிக்க முடியவில்லை. தற்போது அது 'அசுரன்' படம் மூலம் நிகழ்ந்திருக்கிறது. என் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நல்ல விஷயம் இது.

**தனுஷ், வெற்றிமாறன் கூட்டணியில் இணைந்தது குறித்து?**

நடிகர் தனுஷை எனக்குப் பல வருடங்களாகத் தெரியும். அவரின் ரசிகையும் கூட நான். தனுஷ் மிகவும் திறமையான நடிகர். தனுஷை நீண்ட நாட்களாகவே தெரியும் என்பதால் அவருடன் இணைந்து நடித்தது மிகவும் சௌகரியமாக இருந்தது.

தனுஷ், வெற்றிமாறன் கூட்டணி ஒரு தனித்துவமான கூட்டணி. தேசிய அளவில் பாராட்டுதல்களைப் பெற்ற படங்களைப் படைத்தவர்கள். எனக்கு வேறு திரையுலகில் பணியாற்றுவது போன்ற எண்ணமே வராமல் அவர்கள் அவ்வளவு அன்பாகவும் அக்கறையாகவும் பார்த்துக்கொண்டனர்.

இவர்கள் இருவருக்கும் எங்கள் மலையாள சினிமாவில் நிறைய ரசிகர்கள் உள்ளனர். குறிப்பாக வெற்றிமாறன் இயக்கிய படங்களுக்குக் கேரளாவில் நல்ல வரவேற்பு உண்டு என்பதை அறிவேன். அதனால், என்னைவிட என்னுடைய சகாக்கள் மிகவும் ஆர்வமாக இருந்தனர். மலையாளக் கலைஞர்களை தமிழ் திரையுலகினரும் ரசிகர்களும் அன்புடன் வரவேற்பதைப் பார்க்க மகிழ்ச்சியளிக்கிறது.






'அசுரன்' வாய்ப்பு பற்றி முதலில் தகவல் வந்தபோது வெற்றிமாறன் படம் என்றதும் சம்மதத்துடன்தான் இருந்தேன். பின்னர் கதையை கேட்டவுடன் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. தனுஷ் என்னை தொடர்பு கொண்டு இப்படத்தில் நடிக்க கேட்டபோது உடனே 'ஓகே' சொன்னேன்.



தனுஷ், வெற்றிமாறன் இருவரிடமும் நிறைய கற்றுக்கொள்ள முடியும். படத்தைப் பற்றி அறிவிக்கும்போதே என் பெயரையும் சேர்த்து அறிவித்தனர். 'தனுஷின் அசுரன்' என்று மட்டும் தெரிவித்தாலே போதும் என்றாலும் எனது பெயரையும் சேர்த்தது மலையாளக் கலைஞர்கள் மேல் அவர்கள் வைத்திருந்த மதிப்பைக் காட்டியது.

படப்பிடிப்பின் இடைவெளியில் கூட மலையாள சினிமாவைப் பற்றி நிறைய விவாதிப்போம். மம்முட்டி, மோகன்லால் முதற்கொண்டு புதிய தலைமுறை நடிகர்கள் வரை அவர்கள் நிறைய தெரிந்து வைத்திருக்கின்றனர். படம் பற்றி அறிவித்தவுடன் நிறைய பேர் என்னை தொடர்புகொண்டு இதன் முக்கியத்துவத்தைப் பற்றி என்னிடம் சொல்லிக் கொண்டே இருந்தனர்.

**தமிழில் தொடர்ந்து நடிப்பீர்களா?**

'அசுரன்' தமிழில் எனக்கு ஓர் அரிய வாய்ப்பு. அவ்வகையில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. இதுபோன்ற நல்ல கதையம்சம் உள்ள படங்கள் வாய்த்தால் நிச்சயம் தமிழில் தொடர்ந்து நடிப்பேன்.

**படத்தின் வெற்றியா அல்லது நடிப்புக்காக விருது வாங்குவதா? எது உங்களுக்கு முக்கியம்?**

படத்தைப் பற்றியும் படத்தில் எனது நடிப்பைப் பற்றியும் மக்கள் கூறும் கருத்துகளே எனக்கு முக்கியம். எப்போதும் நான் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவே விரும்புவேன். விருதுகள் என்பது மிகவும் ஊக்கப்படுத்துவதாக அமையும். தற்போது பெரும்பாலான விருதுகள் மக்களின் வாக்குகளால் முடிவு செய்யப்படுவதால் இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருக்கும். அதனால், மக்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

**மலையாள வரவுகள் தமிழ்நாட்டில் ஜொலிப்பதைப் பற்றிய உங்கள் பார்வை?**

திறமை இருந்தால் எங்கு நடித்தாலும் உச்சத்தை அடைய முடியும். பட எண்ணிக்கையில் எனக்கு நம்பிக்கை இல்லை. எங்கள் கேரளாவில் இருந்து வந்த நயன்தாரா இங்கு முன்னணி நடிகையாக இருப்பதைப் பார்க்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. எனக்கு மிகவும் பிடித்த கடின உழைப்பாளி, திறமைசாலி அவர். அவர் இந்த உயரத்தில் இருப்பதற்கு நூறு சதவீதம் தகுதியானவர்.

**ஒரு நடிகையாக நீங்கள் எப்படி?**

நான் இயக்குனரின் நடிகை. இயக்குனர் என்ன கேட்கிறாரோ அதை கொடுக்க நான் முடிந்த அளவு முயற்சிப்பேன். சில இயக்குனர்கள் அதை நாமே செய்வதற்கு முழு சுதந்திரம் கொடுப்பர். ஆனால், நான் எப்போதும் இயக்குனர் என்ன சொல்கிறாரோ அதையே கேட்பேன். ஒவ்வொரு இயக்குனருக்கும் ஒரு தனி வழி இருக்கும். நான் நடிப்பது அக்கதாபாத்திரத்திற்கு வலு சேர்ப்பதாகவும் இருக்கவேண்டும்.

நான் நடித்த 'ஹவ் ஓல்ட் ஆர் யு', 'சாய்ரா பானு' போன்ற நாயகியை மையப்படுத்திய படங்கள் மக்களால் வெகுவாக ரசிக்கப்பட்டது இன்னும் நினைவில் இருக்கிறது. இதுபோன்ற தனித்துவமான படங்களில் நடிக்க இயக்குனர்கள் என்னை அழைப்பதை நான் என்னுடைய அதிர்ஷ்டமாகவே கருதுகிறேன். திரையரங்கை விட்டு வெளியில் வந்தாலும் ரசிகர்களின் நெஞ்சில் நிற்கும் பாத்திரங்களை ஏற்று நடிப்பதே எனக்கு பிடிக்கும்.



**மலையாளத்தில் மோகன்லாலுடன் நிறைய படத்தில் நடித்திருந்தாலும் இதுவரை மம்முட்டியுடன் இணைந்து நடித்ததில்லையே?**

உண்மையில், நான் லாலேட்டனுடன் (மோகன்லால்) நிறைய படங்களில் நடிக்கவில்லை. ஏழு படங்கள் மட்டுமே என்று நினைக்கிறேன். மம்முட்டியுடன் இணைந்து நடிப்பது என்பது என்னுடைய நெடுநாள் கனவு. அந்த தருணத்திற்காகக் காத்திருக்கிறேன். அதற்கு மம்முட்டியும் சம்மதிக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்.

**சொந்த வாழ்க்கையிலும், திரையுலக பயணத்திலும் பல விமர்சனங்களை எதிர்கொண்டவர் நீங்கள். எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள் விமர்சனங்களை?**

என்னை முன்னேற்றிக் கொள்வதற்காக கூறும் விமர்சனங்களை நான் எப்போதும் மதிப்பேன். வெற்றிகளை நான் எப்போதும் என் தலையில் ஏற்றிக்கொள்வதில்லை. அதுபோலதான் தோல்விகளும். அதை ஓர் அனுபவமாக எடுத்துக்கொண்டு அதிலிருந்து கற்றுக்கொண்டு முன்னேற

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)


TOWER CROSSTOWN
ASPENRIDGE
Don Mills Rd & Eglinton Ave East
Starting from $450,000
Completion November 2023
24 Hours Concierge
Get VIP Platinum Access to the Best Units and the Best Pricing
416.321.6969
HomeLife / GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated


நம்மை நாமே
காத்துக் கொள்வோம்!
முழங்கையால்
மறைத்து
இருமலாம்
உங்கள்
கைகளைக்
கழுவுங்கள்
2 m
எப்போதும் 2மீ
இடைவெளிவிடுங்கள்
உங்கள் முகத்தை
மறைக்கவும்
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre gouvernement
Québec

புதிய புத்தகங்கள் - திரைப்படங்கள்:

# தீக்கொன்றை மலரும் பருவம்

– ரதன் –

நைஜீரியாவிற்கும் தமிழ் மக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. 1970-80களில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து ஏராளமான தமிழ் பட்டதாரிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள் போன்றோர் எண்ணெய் வளங்களைக் கொண்ட செல்வந்த ஆபிரிக்க நாட்டிற்கு வேலை பெற்று புலம் பெயர்ந்தனர். அந்த நாடுகளுள் நைஜீரியாவும் ஒன்று. ஆபிரிக்கக் கண்ட நாடுகளுள் நைஜீரியாவிலேயே அதிகளவு தமிழர் வாழ்ந்துள்ளனர், வாழ்கின்றனர்.

1983 இனக் கலவரத்தைத் தொடர்ந்து மேற்கு நாடுகளில் பல தமிழ் மக்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். நைஜீரியாவிற்குச் சென்றோரும் மேற்கு நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர். நைஜீரியாவில் ஏற்பட்ட பல அரசியல் மாற்றங்களும் ஒரு காரணம் எனக் கூறப்படுகின்றது. 1980களின் நடுப் பகுதியில் கனடாவிலிருந்து வெளிவந்த தாயகம் பத்திரிகையில் அதன் ஆசிரியர் ஜோர்ஜ் இ. குருசேவ் 'நைஜீரிய மூளைசாலியுடன் ஒரு நாள்' (தலைப்பு சரியாக ஞாபகத்தில் இல்லை) என்ற சிறுகதையை எழுதியிருந்தார். இக்கதை புலம் பெயர் வாழ்வில் ஏற்பட்ட சமூக முரண்களை மிகவும் ஆழமாகப் பதிவு செய்தது.

